பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 12 வெள்ளிக்கிழமை 28.11.2025 கதிர் 020

## இது ரகசியம் அல்ல!

முன்னாள்ஜனாதிபதிமகிந்தராஜபக்ச நேற்றுக் காலை கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால், வழக்கமான பரிசோதனைகளுக்காக ஆவர் ☞2

### நிலமெங்கும் புரண்டோடிய கண்ணீர்

# பேரெழுச்சியோடு தாயகம் எங்கும் நேற்று மாவீரர் நாள் நினைவேந்தல்

### 30 துயிலுமில்லங்களில் பெரு நிகழ்வுகள்



தாயகக்கனவுடன்தமிழ்மக்களுக்காகதம்முயிர்களை மனமுவந்துஈகம்செய்தகளமாடிச்சரித்திரம்படைத்த மாவீரர்களை தமிழர் தாயகம் எங்கும் நேற்று தமிழ் மக்கள் பேரெழுச்சியோடு நினைவுகூர்ந்து ☞2

## சுதந்திரமான மாவீரர் தினத்திற்காக ஆளும்தரப்பிற்கு நன்றி – சாணக்கியன்

மாவீரர்தினத்தில்வடக்குமற்றும்கிழக்குமுழுவதும் மக்களுக்கு சுதந்திரமான முறையில் அஞ்சலி செலுத்த வாய்ப்பளித்தமைக்கு ஆளும்தரப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய மண்ணே எங்களின் சொத்து, சுயநிர்ணய உரிமையை கோருவதால் எமது நிலத்தை அபகரிக்க கூடாது. வடக்கு மற்றும் கிழக்கில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தவும், மாவீரர்கள் உயிர்த்தியாகம் செய்வதற்கும் எங்களின் நில அபகரிபே காரணம். தொடர்ந்தும் இதற்கு அனுமதியளிக்க முடியாதென இலங்கைத் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ☞7

## தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்க நடவடிக்கை எடுங்கள்

### எதிர்க் கட்சி நாடாளுமன்றில் வலியுறுத்து

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்காத காரணத்தால் இன்றளவில் தேசிய காணி கொள்கை ஒன்றை தயாரிக்க முடியாதுள்ளது. தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்கப்பட்டு கடந்த ☞7

## கண்டியில் மண் சரிவில் சிக்கிய 7 பேரும் இறப்பு

கண்டிமாவட்டத்தில்நிலவும்மழைக் காலநிலையால், பாத்தஹேவஹேட்ட பகுதியின் மெதகம பல்லேகம மற்றும் உடுதும்பரமஹவெலஆகியஇடங்களில் உள்ள இரண்டு வீடுகள் மீது மண் குவியல்கள் சரிந்து விழுந்ததில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

மெதகம பல்லேகம வீட்டில் இருந்த கணவன்-மனைவி இருவர், மஹவெலவீட்டில்இருந்ததந்தை ☞7

## புயலாக மாறியது காற்றழுத்தம் வடக்கு நோக்கி ‘தித்வா’ நகர்வு

வங்காள விரிகுடாவில் இலங்கை கடற்கரைக்கு அருகில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, நேற்று வியாழக்கிழமை மாலை புயலாக வலுப்பெற்றுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தச் சூறாவளிக்கு ‘தித்வா‘ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு வளிமண்டலத்தில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியானது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்று, நேற்று மாலை 4 மணியளவில், மட்டக்களப்பிற்குத் ☞6

### தமிழ்க் கிராமங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும்

## கிவுள் ஓயா திட்டம் பற்றி கலந்துரையாடல் நடத்துக

### சத்தியலிங்கம் எம்.பி. வலியுறுத்து

வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் கிவுல்ஓயா திட்டம் தொடர்பானநடவடிக்கைகளில்வெளிப்படைத் தன்மையை காண முடியவில்லை. பாரம்பரியமாக வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திட்டமாக இது காணப்படுகிறது. இந்த திட்டம் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை தமிழ் அரசுக்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர் ☞6

## பல உயிர்கள் இழக்கப்பட்ட பின்னரும் பேரிடர் நிலையை அறிவிக்கவில்லை

### ஆளும்தரப்பின் மீது எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

நாடு முழுவதும் இடர் நிலைமை ஏற்பட்டு வருகிறது. மனிதஉயிர்கள்இழக்கப்பட்டுள்ளன. என்றாலும் ஆளும்தரப்பு இதுவரை இடர் முகாமைத்துவ நிலைமையை உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் இருக்கிறதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில், கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாச அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞6

## 3 ஏ.எல். பரீட்சைகளுக்கான புதிய திகதிகள் அறிவிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் 3 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளனஎன்றுநேற்று காலை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி ☞6

## 323 கொள்கலன்கள் விடுவிப்புக் குறித்து விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக் குழு

### நீதி அமைச்சர் தலைமையில்

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பரிசோதனைகள் ஏதுமின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் ஆராய்ந்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் 11 பேரை ☞7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறாரே தவிர, அவருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவரது வழக்கமான மருத்துவப் பார்வையிடலின்போது மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட சிலபரிசோதனைகளுக்காக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்' என்று அவரது செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்திருக்கிறார். மகிந்தவின் மகனான நாமலும் இதனை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி நல்ல உடல்நலத்துடன் இருப்பதாகவும், அவருக்கு எந்த கடுமையான நோயும் இல்லை என்றும் கூறினார். முதுமையால் ஏற்படும் சாதாரண நிலையைத் தவிர, தனது தந்தைக்கு வேறு எந்த சிறப்பு நோயும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தினார்.

மகிந்த உடல்நலத்துடனேயே இருக்கிறார் எனவும், கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு அவரது ஆசிகள் எப்போதும்கிடைக்கும்என்றும்நாமல்ராஜபக்ச மேலும் கூறியிருக்கிறார். வயது மூப்பினால் ஏற்படும் வழக்கமான உபாதைகள்தான் அவருக்கு ஏற்பட்டிருக்கின்றனவாம். கவலைப்படும்படிஎதுவும்இல்லைஎன்பதுதான் அவர்கள் சொல்ல வருவது.

.......................................................

அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்று பொலிஸ் தரப்பிலிருந்து வந்திருக்கிறது. அது எவ்வளவுதூரம் மிகச் சரியான தகவல் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், அது உண்மையானால் மிகப் பெரிய விவகாரம் அது.

கடந்த காலங்களில் பொலிஸ் திணைக்களத்திலிருந்து சுமார் நானூறு பேர் அண்மைக் காலங்களில் பணி நீக்கம் மற்றும்இடைநீக்கம்செய்யப்பட்டுள்ளனராம். அரசு தகவல் துறையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கின்போது பொலிஸ் உயரதிகாரி ஒருவர் இந்தத் தகவலைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

பணிநீக்கம் செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டுகளைக்கொண்டுள்ளனர்என்றும் எஞ்சியவர்கள் ஊழல் குற்றச்சாட்டுக்களில் மாட்டிக்கொண்டவர்கள் என்றும் ந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அவர் பொறுப்பான பதவியிலுள்ள சட்டம் தெரிந்த அதிகாரி என்பதால் அவரது தகவலில் தவறு இருக்க வாய்ப்பில்லைஎன்றேஎதிர்பார்க்கப்படுகின்றது.

ஆக மொத்தத்தில் வேலியே பயிரை மேய்ந்த கதை என்பது இதைத் தான். அரச திணைக்களங்களிலேயே ஊழல்வாதிகளும் குற்றவாளிகளும்நிறைந்தஒருதிணைக்களமாக இருப்பது பொலிஸ் துறையே என்பது எப்போதும் மக்களின் குற்றச்சாட்டாக இருந்து வந்திருக்கிறது. இப்போது அது உண்மை என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் தொக்கி நிற்கும் கேள்வி என்னவென்றால், பணி நீக்கம் மற்றும் இடைநீக்கம் என்பன மட்டுமே அவர்கள் செய்த குற்றங்களுக்கான தண்டனையாக முடியுமா என்பதுதான். அவர்கள் செய்த குற்றங்களுக்காக அவர்கள் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். பணிநீக்கம் என்பது குற்றங்களுக்கான தண்டனையாக முடியாது.

.......................................................

இலங்கையில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பல இடங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கிழக்குக் கடலில் மையம் கொண்டுள்ள காற்றழுத்தம் காரணமாக இந்தக் கனமழை கிடைத்து வருகிறது. இந்தக் காற்றழுத்தம் இப்போது புயலாக மாறிவிட்டது. அதனால் தொடர்ந்தும்மழைபெய்யும்என்றேதெரிகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் அதிக மழை பெய்கிறது. இதனால் கிழக்கின் பல பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் கடந்த 24 மணி நேரத்தில் அதிகளவானமழைவடக்கில்தான்பெய்துள்ளது. வழக்கமான மழை நாள்களைவிட மூன்று நான்கு மடங்கில் மழை பெய்துள்ளது.

2025 நவம்பர் 27 காலை 8.30 மணி முதல் நவம்பர் 28 அதிகாலை 4.30 மணி வரை பெய்த மழையின் அளவின்படி வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் பகுதியில் மிக அதிகமாக 315 மிமீ மழை பெய்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அலம்பில் பகுதியில் 305 மிமீ மழை பெய்துள்ளது. கண்டிநகரில்223.9மிமீமற்றும் மன்னாரின் மடு பகுதியில் 218.5 மிமீ மழை பெய்துள்ளது. இரத்தினபுரி, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை பகுதிகளிலும் 200 மி.மீக்கும் மேல் மழை பெய்துள்ளது. அடுத்துவரும்நாள்களிலும்வடக்கில்தொடர்ந்து மழை பெய்யும் என்றே முன்னறிவித்தல் விடுக்கப்பட்டிருப்பதால் வெள்ளம் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியமாகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பேரெழுச்சியோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தினர்.
நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்விடங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கூடி இந்த தமது நன்றியறிதலை மாவீரர்களுக்குச் செலுத்தினர். அந்தச் சந்தன மேனியர்களுக்கு தமிழர்தாயகமானவடக்கு, கிழக்கில் உள்ள 30 மாவீரர்துயிலும்இல்லங்களில்முதன்மையான அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.
தவிர, தனி மாவீரர் நினைவிடங்கள், உள்ளூராட்சி சபைகள், அரசியல் கட்சிகளின் பணிமனைகள் மற்றும் தனிநபர்களால் அமைக்கப்பட்டமாவீரர்நினைவாலயங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த வருடம் வழக்கத்திலும் பார்க்க அதிகளவானஇடங்களில்மாவீரர்நினைவேந்தல் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. மாலை 6.05 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டது. அகவணக்கத்தைத்தொடர்ந்து மாவீரர்களுக்கான முதன்மைப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. சமநேரத்தில்ஏனையசுடர்களும் ஏற்றப்பட்டு தமிழ் உறவுகள் கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தினர்.

இது தவிர புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளிலும் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

### கனகபுரம்

கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் சகோதரர் மூர்த்தி, பொதுச்சுடரை ஏற்றி வைத்தார். இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியிருந்தனர்.

### யாழ். பல்கலை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வில் மாணவர்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### கோப்பாய்

யாழ்ப்பாணம், கோப்பாய் துயிலுமில்லத்திற்கு அருகில் இடம்பெற்ற மாவீரர் நாள்நினைவேந்தலில்மூன்றுமாவீரர்களின் தாயான நடேசு தவ மணி பொது சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கூடியிருந்த மக்கள்விளக்கேற்றிமாவீரர்களைஅஞ்சலித்து ஆராதித்தனர்.

### நல்லூர்

யாழ்ப்பாணம், நல்லூர் மாவீரர் நினைவலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்த லில் மாவீரர் கப்டன் பண்டிதரின் தாயார் பொது சுடரினை ஏற்றி வைத்தார். பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் இந்த நிழ்வில்பங்குகொண்டுஉணர்வெழுச்சியுடன் மாவீரர்களைநினைவுகூர்ந்துஅஞ்சலித்தனர். மாலை 06.05 க்கு மணி ஒலிக்க, 06.06 க்கு மௌன அஞ்சலி செலுத் தப்பட்டு, பொதுச் சுடர் ஏற்றப்பட்டு துயிலும் இல்ல கீதம் ஒலிக்கப்பட்டது. இதன்போது மண்ணின் விடுதலைக்காகவித்தாகியோரதுபெற்றோரும், உரித்துடையோரும் கண்ணீர் விட்டு அழுதமையை அவதானிக்க முடிந்தது. நல்லூர் வளாகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர்களின் கல்வெட்டுகளையும் மக்கள் பார்வையிட்டனர்.

### பருத்தித்துறை

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறைநகரில்மிகவும்எழுச்சிபூர்வமாக இடம்பெற்றது. பருத்தித்துறை நகரசபை தரப்பின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நகர் வாழ் மக்கள் இணைந்து முன்னெடுத்த நிகழ்வில் மாலை 6.07 மணிக்கு மாவீரரின் பெற்றோர் பொதுச்சுடரை ஏற்றிவைக்க, மூன்று மாவீரர்களை பெற்றெடுத்த தாய் ஒருவர் மாவீரர்ரகளின் படத்துக்கு மாலை அணிவிக்க, மாவீரர்களின் உரித்துடையோர் உள்ளிட்ட பொது மக்கள்

### சாவகச்சேரி

சாவகச்சேரி நகர்ப் பகுதி யில் பேருந்து நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக மாவீரர் நினைவிடத் தில் 27ஓ11 வியாழக்கிழமை பிற்பகல் மாவீரர்களுக்கு

### கொடிகாமம்

யாழ்ப்பாணம் , கொடிகாமம் துயிலுமில்லத்தின் முன்பாக இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மாவீரர் மேரியனின் தாயான கந்தையா நாகராணி பொது சுடரினை ஏற்றி வைத்தார். பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் திரண்டு இந்நிகழ்வில் பங்குபற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### உடுத்துறை

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்விக் நேற்று மாலை 6:05 மணியளவில் மணியோசை இசைக்கப்பட்டு மாலை 6:06 இற்கு பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் பொது நினைவேந்தல் பிரதான கல்லில் மலர் மாலை போடப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது இவ் நினைவேந்தல் நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர், பொது மக்கள், இளைஞர்கள் சிறுவர்கள், முன்னாள் மாகண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அருட்தந்தைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### கட்டைக்காடு

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழக பொது மண்டபத்தில் நேற்று மாவீரர் நினை வொலி எழுப்பப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன ஏனைய மாவீரர்கள் மற்றும் மக்களுக்குமாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தனித் தாயகம் கோரிய விடுதலைப் போராட்டத்தில் தன்னுயிர் கொடுத்த வீர மறவர்களை நினைவேந்தி பொதுப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மாவீரர் திருவுருவப்படங்களிற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு பொதுச்சுடர் ஏற்றி நினைவேந்தப்பட்டது வீர மரணம் கண்ட மாவீரர்களை கண்ணீரோடு மக்கள் அஞ்சலித்தனர். சீரற்ற காலநிலைக்கு மத்தியில் துயிலும் இல்லம் செல்ல முடியாத மக்கள் ஒன்று திரண்டு இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் அலஸ்ரன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

### தீவகம் சாட்டி

யாழ்ப்பாணம் , தீவகம் சாட்டி துயிலுமில்லத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மூன்று மாவீரர்களின் தந்தையான செல்லர் அருளம் பலம் பொது சுடரை ஏற்றி வைத்தார்.

### அளம்பில்

மழையுடன் கூடிய சீரற்ற கால நிலையின் மத்தியிலும் முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் இடம் பெற்றது. இந்தமாவீரர்நாள்நினைவேந்தலில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பங்கேற்றார். குறிப்பாக அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் சரியாக 06.5 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டதுடன் மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தாயாரான பண்டியன் ஞான உதயம் ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்துஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு மாவீரர்நாள் நினை வேந்தல்செயற்பாடுகள்உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டன.

### தம்பலகாமம்

திருகோணமலை, தம்பலகாமம் நான்கு வாசல் பிள்ளையார் ஆலய முன்றிலில் தம்பலகாமம் இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கொட்டும் கனமழையிலும் இடம்பெற்றது. வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூரும் முகமாக சுடரேற்றப் பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழினத்தின் விடுதலைக்காக போராடி உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை இந்த நேரத்தில் அக வணக்கத் துடன் இயற்கையின் பேரிடரைகூடப் பாராமல் நினைவேந்தலை இளைஞர்கள் முன்னெடுத்தனர்.

### ஈச்சங்குளம்

கொட்டும் மழைக்கு மத்தியில் வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வெழுச்சியுடன்மாவீரர்நாள்நிகழ்வுகள் இன்று இடம்பெற்றது. ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில் அதற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் மாவீரர் நாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது..

கடும் மழைக்கு மத்தியிலும் ஆயிரணக் கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலியினை செலுத்தியிருந்தனர்.

### மன்னார், ஆட்காட்டிவெளி

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் உயிரை தியாகம் செய்த வீரர்களை நினைவு கூரும் 'மாவீரர் தின நினை வேந்தல் நிகழ்வு' நேற்று மாலை மன்னார் ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் கொட்டும் மழையிலும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. மாலை 6.05 மணியளவில் மாவீரர் ஒருவரின் தாயினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து மாவீரர்களின் உறவினர்கள், பெருந்திரளான மக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர்மல்க உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### மட்டக்களப்பு, மாவடி முன்மாரி

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி துயிலு மில்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் நேற்று இடம்பெற்றன. மாவடிமுன்மாரி துயிலும் இல்லத் தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள், அரசியல்வாதிகள் எனப் பெரும் எண்ணிக்கையானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு தமிழ் மக்களின் உயரிய இலட்சியத்திற்காகதங்களின்இன்னுயிர்களை தியாகம்செய்தவர்களுக்குஅஞ்சலிசெலுத்தினர்.

துயிலுமில்ல வளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடர் இரண்டு மாவீரர்களின் தாயாரான வள்ளிபுரம் பூமணியினால் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டன. தொடர்ந்துதுயிலுமில்லபாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதி யாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்ததனர். பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு அஞ்சலியைச் செலுத்தி இருந்தனர்.

### முள்ளியவளை

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி மடிந்த வீரர்களை நினைவுகூரும் வகையில் கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் முல்லைத்தீவு முள்ளியவளை துயிலுமில்லத்தில் மாவீரர் அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது. குறித்த அஞ்சலி நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயார் செல்லத்துரையம்மா பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

### அம்பாறை, கஞ்சிக்குடிச்சாறு

நாடளாவிய ரீதியில் சீரற்ற வானிலை நிலவுகின்றபோதிலும் கொட்டும் மழைக்கும் மத்தியில் அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத் தில் நேற்று மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர் களுக்கான பொதுச் சுடர் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற் றோர்கள் மற்றும் உறவினர்கி ஏற்றி வைத்தனர். மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள், அரசியல்வாதிகள் என பெருந்- திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு தமிழ் மக்களின் உயரிய இலட்சியத்திற்காகதங்களின்இன்னுயிர்களை தியாகம்செய்தவர்களுக்குஅஞ்சலிசெலுத்தினர்.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலிபரப்பாகியது. இதன்போது மாவீரர்களின்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# எண்ணெய்ப் பனைகள் மீதான தடையை நீக்க பரிசீலியுங்கள்

## ஆளும்தரப்பிடம் கோரிக்கை முன்வைப்பு

எண்ணெய்ப் பனைகளால் சுற்றுச்சூழலுக்கு மிகக் குறைவான பாதிப்பே ஏற்படுவது ஆய்வில் உறுதியாகியுள்ளதால் இவற்றின் மீதான தடையை நீக்கி ஆளும்தரப்பு முடிவுகளை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எண்ணெய்ப் பனை உற்பத்தித் தடை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் ‘இலங்கை கிராமப்புறச் சுபீட்சக் கலந்துரையாடல் : பனை எண்ணெய் மற்றும் சிறுதோட்ட உரிமையாளர் வாழ்வாதாரம்‘ எனும் தொனிப்பொருளில் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற விசேட வட்டமேசைக் கலந்துரையாடலின் போதே இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவர் டேவி குஸ்டினா டொபிங் கலந்து கொண்டதோடு, இந்தோனேஷியாவில் எண்ணெய் பனை உற்பத்தியின் போக்கு குறித்து விளக்கமளித்திருந்தார். மேலும் சொலிடெரிடாட் நெட்வோர்க் ஆசிய லிமிட்டட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கலாநிதி ஷத்தாத்ரூ, பேராசிரியர்களான அஷோக நுகவெல, டெரன்ஸ் மதுஜித், எஸ்.பி.நிஸ்ஸங்க, தேவக வீரகோன் மற்றும் எஸ்.பி.பிரேமரத்ன ஆகியோரும் வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸவும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதன்போது அவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு :

2021 ஏப்ரலில், அப்போதைய ஆளும்தரப்பு இலங்கையில் எண்ணெய்ப் பனை பயிரிடுவதை முழுவதுமாக தடை செய்வதாக அறிவித்தது. மேலும் தற்போதுள்ள எண்ணெய் பனை தோட்டங்களை வருடாந்த 10 வீதத்தில் முறையாக அகற்றவும் உத்தரவிட்டது. பனை எண்ணெய் தொழில் துறை தொடர்பான அறிவியலுக்கு அப்பால் முன்வைக்கப்பட்ட தவறான கருத்துக்களே அந்த தீர்மானத்துக்கு அடிப்படையானது.

இவ்வாறு எண்ணெய்ப் பனை பயிரிடுவதை தடை செய்வது தொடர்பான ஆளும்தரப்பின் முடிவை ஆதரிக்கும் வாதங்களை சுயாதீனமாக மதிப்பீடு செய்வதற்காக, இலங்கை மற்றும் பிற இடங்களில் எண்ணெய்ப் பனை பயிர்ச்செய்கை பற்றிய அனைத்து தொடர்புடைய அறிவியல் தரவுகளையும் தகவல்களையும் தொகுக்க இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில், எண்ணெய்ப் பனை, காடுகளை (வனங்களை) மாற்றாது. ஆனால் மற்ற பெருந்தோட்டப் பயிர்களுக்கு பதிலாக தென்னை, தேயிலை மற்றும் இறப்பர் ஆகியவற்றுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் வருடாந்தம் தென்னை மற்றும் எண்ணெய்ப் பனை உற்பத்தி முறையே 27,000 மற்றும் 20,000 மெட்ரிக் டொன் ஆகும். உள்ளூர் நுகர்வினை பூர்த்தி செய்ய சுமார் 180,000 முதல் 220,000 மெட்ரிக் டொன் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்தியாவும் இதேநிலையை எதிர்கொள்கிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்தப் பற்றாக்குறையை தென்னையில் இருந்து பூர்த்தி செய்ய வேண்டுமானால், தற்போதைய தேங்காய் உற்பத்தித்திறன் அடிப்படையில் கூடுதலாக 271,000 ஹெக்டயர் தென்னை தேவைப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் சுமார் 70-80 சதவீதம் வீட்டு உபயோகத்திற்காகவும், மீதியில் பெரும்பகுதி மதிப்பு கூட்டப்பட்ட புதுமையான. இலாபகரமான பொருட்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் தேவையான எண்ணெய் உற்பத்திக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தேங்காய்களே கிடைக்கின்றன.

மாறாக, எண்ணெய்ப் பனை தோட்டங்கள் முதன்மையாக தாவர எண்ணெய் விநியோகத்திற்கு பங்களிக்கும். அதன் அதிக விளைச்சலைக் கருத்தில் கொண்டு, 50,000 ஹெக்டயர் மேலதிக நிலம் மாத்திரமே தேவைப்படுகின்றது. தற்போதைய ஆளும்தரப்பு தென்னை விரிவாக்கத் திட்டங்களால் எதிர்வரும் காலங்களில் தாவர எண்ணெய்க்கான தேசிய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. ஆகவே தாவர எண்ணெய் இறக்குமதியைத் தொடரவேண்டும். இது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

எண்ணெய்ப் பனை பயிர் செய்தல் சுற்றுச்சூழல் பாதிப்பை மிகக் குறைவாகவே ஏற்படுத்தும் என ஆய்வில் இருந்து அறியலாம். அறிவியல் வரலாற்றில், ஒரு நல்ல முறையான எண்ணெய்ப் பனை பயிர் செய்தல் மற்றும் செயலாக்க நடைமுறைகளை இந்த ஆய்வு எடுத்துக்காட்டியது மற்றும் முக்கிய பனை எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் உள்ளூர் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள், நடைமுறைகள் மற்றும் சான்றிதழ் திட்டங்களில் இவை பிரதிபலிக்கின்றன. இலங்கையில் பனை எண்ணெய் உற்பத்திக்கு விதிக்கப்பட்ட தடையை நியாயப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அறிக்கையில் உறுதியான ஆதாரங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

எண்ணெய்ப் பனைக்கு உள்ள கட்டுப்பாட்டை நீக்கி விரிவாக்கம் செய்வதால் பொருளாதார வளர்ச்சியும், சர்வதேச வர்த்தகமும், மீதி இருப்பும், அயல்நாட்டு நாணயப் பரிமாற்ற விகிதங்களும், கிராமப்புறப் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றில் பல நேர்மறையான பொருளாதார தாக்கங்கள் ஏற்படும். மேலும் எண்ணெய்ப் பனையை உள்ளீடாகப் பயன்படுத்தும் பல தொழில்களுக்கு பயனளிக்கும். எனவே, இந்த ஆய்வின் அடிப்படையில், ஆளும்தரப்பு தனது முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டது.

# மலையகத்திற்கான தொடருந்துகளின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

மழைக் காலநிலை காரணமாக மலையக பகுதிகளுக்கான தொடருந்து சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்காலிகமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று முன்தினம் முதல் மலையக பிரதான தொடருந்து பாதைகளில் கொழும்பிலிருந்து நானுஓயா மற்றும் பதுளைக்கு இடையிலான இரவு நேர அஞ்சல் தொடருந்துகளை இயக்குவதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி, பிரதான பாதையில் இரவு நேர அஞ்சல் தொடருந்துகள் கொழும்பு கோட்டையிலிருந்து நானுஓயாவுக்கும், நானுஓயாவிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் மட்டுப்படுத்தப்பட்டன. புதன்கிழமை முதல், கொழும்பு கோட்டையிலிருந்து நானுஓயாவுக்கு பயணிக்கும் தொடருந்துகளை இரவு 8.30 மணிக்கும், நானுஓயாவிலிருந்து கொழும்பு கோட்டைக்கு பயணிக்கும் தொடருந்துகளை இரவு 10.50 மணிக்கும் இயக்க ஏலவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொடருந்துத் துறை தெரிவித்திருந்தது.

அதிகளவான இயற்கை இடர்ங்கள் பதிவானதையடுத்து கொழும்பு - பதுளை இரவுநேர தபால் தொடருந்து சேவை நேற்று நாவலப்பிட்டி தொடருந்து நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டதாக தொடருந்துத் துறை தெரிவித்துள்ளது.

நானுஓயாவுக்கும் பதுளைக்கும் இடையில் இரவு நேர அஞ்சல் தொடருந்துகள் இயக்கப்படாத நாட்களில், நானுஓயாவிலிருந்து பதுளை பகுதிக்கு இருக்கைகளை முன்பதிவு செய்த பயணிகள், முன்பதிவு வசதிகள் கொண்ட எந்த தொடருந்து நிலையத்திலிருந்தும் தங்கள் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கை டிக்கெட்டுகளுக்கான பணத்தைப் பெறலாம் என்றும், இதனால் பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்திற்கு வருந்துவதாகவும் தொடருந்துத் துறை தெரிவித்துள்ளது.

# சீனாவிலிருந்து பி.வை.டி.. ரகத்தில் மின் வாகனங்கள் 9,000 இறக்குமதி

ஆளும்தரப்பு வாகன இறக்குமதிக்கு அனுமதியளித்த பின்னர் நவம்பர் 23வரை 9100 பி.வை.டிரகவாகனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 8,190 வாகனங்கள் இலங்கை சுங்கத்தால் விடுவிக்கப்பட்டிருப்பதாக நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகன இறக்குமதி தொடர்பான சட்டங்கள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, நவம்பர் 23ஆம் திகதிவரை 9100 பி,வை,டி ரக வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களில் 8190 வாகனங்கள் இலங்கை சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த வாகத்தின் இயந்திரத் திறன் தொடர்பில் தற்போது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருப்பதால், அது தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கமுடியாது.

அதேநேரம் இந்த வாகனங்களுக்கான தீர்வை வரி, அந்த வாகனங்களின் கிலோவோட் அடிப்படையில் வித்தியாசப்படுகிறது. இயந்திரத் திறன் கிலோ வோட் 100க்கு குறைந்த வாகனத்தின் ஆயுட்காலம் ஒரு வருடத்துக்கு குறைவாக இருப்பின் உற்பத்தித் தீர்வை வரியாக ஒரு கிலோ வோட்டுக்கு 24 ஆயிரத்தி 100 ரூபா அடிப்படையில் அறவிடப்படுகிறது. கிலோ வோட் 100க்கு குறைந்த ஒரு வருடத்துக்கு கூடிய ஆயுட்காலம் கொண்ட வாகனங்களுக்கு ஒரு கிலோ வோடுக்கு 36 ஆயிரத்தி 200 ரூபா தீர்வை வரியாக அறவிடப்படுகிறது.

அதேநேரம் இயந்திரத் திறன் 100 கிலோ வோல்ட்டுக்குக் கூடிய, ஒரு வருடத்துக்குக் குறைவான ஆயுட்காலம் கொண்ட வாகனங்களுக்கு 36 ஆயிரத்தி 200 ரூபா அறவிடப்படுகிறதுடன் ஒரு வருடத்துக்கு கூடிய ஆயுட்காலம் கொண்ட வாகனங்களுக்காக ஒரு கிலோவோட்டுக்கு 60 ஆயிரத்தி 400 ரூபா உற்பத்தி தீர்வை வரியாக அறவிடப்படுகிறது - என்றார்.

# தரமற்ற மருந்தால் பாதிக்கப்பட்ட 17 பேருக்கு இழப்பீடு தரப்பட்டது

## சுகாதார அமைச்சத் தகவல்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற பிரட்னிசோலோன் என்னும் கண் சொட்டு மருந்தால் பார்வையை இழந்தவர்கள் மற்றும் பார்வை குறைபாட்டுக்கு ஆளான பாதிக்கப்பட்ட 17 பேருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு விண்ணப்பித்த 69 பேர் பிரட்னிசோலோன் கண் சொட்டு மருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர் என நிருபனமாகியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கண் சொட்டு மருந்துகளில் எவ்வித சிக்கல்களும் இல்லை என ஊடகமொன்றில் வெளியாகியுள்ள செய்தித் தொடர்பில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கண் செட்டு மருந்துகளில் எவ்வித பிரச்சினையும் இல்லை என ஊடகமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. முன்னாள் அமைச்சர் கெஹலிய காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பிரட்னிசோலோன் என்னும் கண் சொட்டு மருந்தை உபயோகித்து பார்வையை இழந்த மற்றும் பார்வைக் குறைபாட்டுக்கு ஆளாகிய பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு சுகாதார அமைச்சால் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தரமற்ற மருந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு பெற சுகாதார அமைச்சுக்கு சுமார் 99 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் 17 பேருக்கு 1 கோடி 47 லட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 69 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. பிரட்னிசோலோன் என்னும் கண் சொட்டு மருந்தால் பாதிப்புக்குள்ளானவர்களின் உண்மைத் தன்மைத் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த குழுவின் அறிக்கைகமைய, மருந்தால் பாதிக்கப்பட்டவர்களென இனங்காணப்பட்ட நபர்களுக்கு மாத்திரம் இழப்பீடு வழங்கப்பட்டது - என்று அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வலியில்லா வரி முறையே தேவை

இலங்கை உள்நாட்டு வருவாய் திணைக்களம் (IRD) இவ்வாண்டு இதுவரை 2 இலட்சம் புதிய வரி கட்டுபவர்கள் மற்றும் 18,000 புதிய நிறுவனப் பதிவுகளைச் செய்துள்ளது என்பது பொருளாதார ரீதியாக குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். மேலும், கடந்த வருடத்தை விட 18% அதிகமாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கை மீறி, இதுவரை 2,080 பில்லியன் ரூபாய் வசூலித்திருப்பது வரலாற்றிலேயே மிக உயர்ந்த வருவாய் திரட்டலாகப் பதிவாகியுள்ளது. தொடர்ச்சியான பொருளாதார அழுத்தங்களுடனும் நெருக்கடிகளுடனும் திணறிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில் இது சிறப்பு வாய்ந்த சாதனைதான்.

இந்நாட்டின் வரி அமைப்பின் மிகப்பெரிய குறைபாடுகளில் ஒன்று குறுகிய வரி வலையமைப்பு மற்றும் மிகுதியான மறைமுக வரிகள் மீது அரசின் சார்பு என்பதே. அதிக வருமானம் ஈட்டும் பிரிவினர் நேரடி வரி களிலிருந்து தப்பிக்கும்போது, குறைந்த வருமானம் பெறும் பிரிவினரே மறைமுக வரிகளின் சுமையை சுமக்க வேண்டிய சூழல் உருவாகிறது. எனவே வரி வலையமைப்பை விரிவாக்குவது சமூகவியல் ரீதியாகவும், பொருளாதார நீடித்தன்மைக்காகவும் முக்கியமானது. இந்தப் புதிய பதிவுகள் அந்த நோக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையே காட்டுகின்றன.

ஆனால் இந்தச் சாதனையின் பின்னால் மறைந்திருக்கும் சிக்கல்கள் இன்னும் ஆழமானவை. பொதுமகனின் பார்வையில் வரி செலுத்தும் கடமை இன்னும் குழப்பமூட்டுவதிலும் பயமூட்டுவதிலும் இருந்து விடுபடவில்லை. தகவல் புலமையின் குறைவு, நடைமுறைக் கட்டளைகளின் சிக்கலான தன்மை, அரசுத் துறைகளின் மீதான நம்பிக்கையின்மை—இவை அனைத்தும் இணைந்து, வரி செலுத்துவதைப் பெரும்பாலான மக்களுக்கு சிரமமான செயலாக மாற்றியுள்ளன.

### குழப்பமான செயல்முறை

வரி அறிக்கைகள் தாக்கல் செய்ய வேண்டிய காலக்கெடு நெருங்கும்போது, சமூக ஊடகங்களே பொது மக்களின் மனநிலையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சந்தேகங்களின் பெருக்கு, முரண்பட்ட ஆலோசனைகள், குழப்பம்—இவையே அங்கு அதிகம் காணப்படுகிறது.

- சொத்துக்களை எவ்வாறு அறிவிக்க வேண்டும்?
- எந்த வகை வருமானத்தை எப்படிச் சுட்டிக்காட்டவேண்டும்?
- வெளிநாட்டு வருமானத்தை எப்படிக் கணக்கிடுவது?
- இணையதளப் படிவங்கள் எவ்வாறு நிரப்பப்படவேண்டும்?

இதுபோன்ற கேள்விகள் எண்ணற்றவை. கணக்கியல் அறிவு அற்ற பொதுமகனுக்கு இவை எளிதானவை அல்ல. வரி ஆலோசகர்கள் உள்ளனர்; ஆனால் அவர்களின் சேவைகளுக்கான செலவைப் பலராலும் ஏற்க முடியாது. இதனால் மக்கள் தவறாக நிரப்புவதோ அல்லது தாக்கல் தராமல் விடுவதோ நடக்கிறது.

### தொழில்நுட்ப குறைகளும்

உள்நாட்டு இறைவரி திணைக்கள இணையதளம் மற்றும் அதன் நிகழ்நிலைப் படிவங்கள் பற்றிய முறைப்பாடுகள் மீண்டும் மீண்டும் எழுகின்றன.

- வடிவங்கள் சிக்கலானவை
- சில இடங்களில் வழிகாட்டுதல்கள் தெளிவாக இல்லை
- தொழில்நுட்ப கோளாறுகள்
- முரண்பாடான தகவல்கள்

இவை அனைத்தும் புதிய வரி கட்டுபவர்களை மனமுடைந்து போகச் செய்கின்றன. வரி வலையமைப்பை விரிவாக்கும் நிலையில், மக்களுக்கு நட்பான எண்ணிம (டிஜிட்டல்) அமைப்பு கட்டாயம். ஆனால் அதற்கான முன்னேற்றம் தகுந்த வேகத்தில் நடைபெறவில்லை.

சில விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டாலும், அது இன்னும் போதுமானதாக மாறவில்லை. ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான புதிய வரி தனிநபர்கள் சேரும் சூழலில் முழுமையான வரி கல்வி அவசியமாகிறது.

- அரசின் விரிவான வழிகாட்டல் நிகழ்ச்சிகள்
- தொழில் சங்கங்கள், குடியரசு அமைப்புகள் மூலம் மக்கள் பயிற்சி
- பள்ளி–பல்கலைக்கழகத் தரத்தில் நிதி கல்வி
- வரி விழிப்புணர்வு சில குறிப்பிட்ட வல்லுநர்களின் அறிவாக மட்டும் இருக்கக்கூடாது. அது ஒவ்வொரு குடிமகனுக்கும் எளிய முறையில் சென்றடைய வேண்டும்.

### நம்பிக்கை பற்றாக்குறை

வரி செலுத்தும் பண்பைத் தடுத்து நிறுத்தும் மிகப்பெரிய காரணம் அரசின் மீதான நம்பிக்கையின்மை.

பல ஆண்டுகளாக:

- ஊழல்
- பொது நிதி தவறான பயன்படுத்தல்
- வெளிப்படைத்தன்மையின் பற்றாக்குறை

இவையெல்லாம் மக்கள் மனதில் சந்தேகத்தை விதைத்துள்ளன. மக்கள் தாங்கள் செலுத்தும் வரி எவ்வாறு பயனடைகிறது என்பதைக் காணாதபோது அவர்களை இணக்கமாகப் பணியமர்த்துவது கடினமாகிறது. எனவே அரசாங்கம் வெறும் இலக்கு அறிவிப்புகள் மூலம் நம்பிக்கை பெற முடியாது.

வருவாயின் பயன் எவ்வாறு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துகிறது என்பதைத் தெளிவாகக் காட்டும் பொறுப்புணர்வு தேவை.

இன்றும் வரி செலுத்தத் தகுதியுள்ள பலர் முறையாக வரி செலுத்தவில்லை.

- வருமானத்தை சரியாக பதிவு செய்யாத வணிகர்கள்
- வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்து பணத்தை வெளிநாட்டிலேயே வைத்திருப்பவர்கள்
- கணக்கில் காட்டப்படாத வருமானம்

இவை அனைத்தும் நேரடி வரி அமைப்பில் மிகப்பெரிய வெற்றிடங்களாக உள்ளன. ஐறூயும் இதனை கடுமையாக கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

### வரி விரிவாக்கம் மட்டும் இலக்கல்ல

IRD எட்டியுள்ள சாதனை பாராட்டுக்குரியது. ஆனால் அதை நிலைநிறுத்த, மேலும் முன்னேற்ற, வரி அமைப்பின் ஆழமான குறைகளைக் களைவதே அவசியம்.

வரி செலுத்துபவருக்கு எளிதான செயல்முறை, தெளிவான வழிகாட்டல், வெளிப்படையான அரசாங்கம்—இவையே ஒரு நியாயமான வரி அமைப்பின் மூலத்தளங்கள்.

எண்களை மட்டுமே சாதனையாகக் கருதாமல்,

மக்களுக்கு நட்பான, சமமான, வெளிப்படையான வரி அமைப்பு உருவாக்கப்படும்போதுதான் இந்த சாதனை உண்மையான தேசிய முன்னேற்றமாக மாறும்.

## மழை தொடரும் என்பதால்

# உயிர், சொத்துக்களை பாதுகாக்க நடைவடிக்கை எடுக்கப் பணிப்பு

மழையுடனான காலநிலை தொடருமென காலநிலை அவதானிப்பு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. அதனால், உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசுத் தலைவர் சகல தரப்பினருக்கும் பணிப்புரையளித்துள்ளார்.

மண்சரிவு ஏற்படும் சாத்தியமுள்ளவை என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வாழ்பவர்கள் அவ்விடங்களைவிட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நிலமை சீரானதன் பின்னர் அவர்களுக்கு நிலையான தீர்வைப் பெற்றுத்ருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்மைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பானச அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவும் மழையுடனான அசாதாரண காலநிலை குறித்து அரசுத் தலைவர் தலைமையில் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் முப்படைகளின் அதிகாரிகள், வானிலை மற்றும் காலநிலை ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் அதிகாரிகள், இடர் முகாமைத்துவ அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டுள்ளார்கள்.

நீண்ட காலத்துக்கு பிறக்கு இலங்கைக்கு தற்போது அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதாகவும், ஆகவே தற்போதைய மழையுடனான காலநிலை இன்னும் ஓரிரு நாட்களுக்கு தொடரும் என்றும் துறைசார் தரப்பினர்கள் எதிர்வுகூறியுள்ளார்கள். உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அரசுத் தலைவர் விசேட பணிப்புரை விடுத்தார்.

தற்போதைய தேசிய பிரச்சினையை கருத்திற் கொண்டு ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். மலையகத்தின் நிலைமை கவலைக்குரியதாக உள்ளது. பெரும்பாலான நீரத்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஆகவே நீர்தேக்கத்தை அண்டிய பகுதிகளில் வாழ்பவர்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

பதுளை மாவட்டத்தில் பசறை பகுதியில் 63 குடும்பங்கள் மண்சரிவு அதி அவதானம் என்று அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் வாழ்கிறார்கள். நேற்று இரவு (நேற்றுமுன்தினம்) அரச அதிகாரிகள் வீடு, வீடாகச் சென்று அவதானநிலையை எடுத்துரைத்த போதிலும் 4 குடும்பங்கள் மாத்திரமே அவ்விடத்தில் இருந்து வெளியேறியுள்ளன.

ஆபத்தான இடத்தில் வாழ்பவர்கள் தற்போதைய அசாதாரண நிலையை கருத்திற் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். முதலில் உயிரை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நிலமை சீரானதும், நிலையான தீர்வு குறித்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் - என்றார்.

## மழைக் கால நிலைலைய எதிர்கொள்ள

# எம்.பிக்களை உடனடியாக ஊர்களுக்கு அனுப்புங்கள்

## நாமல் எம்.பி. வலியுறுத்து

நாட்டில் நிலவும் மழைக்காலநிலையால் தற்போது ஏற்பட்டுள்ள இடர் நிலமைகளில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக ஆளும்தரப்பு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு நாடாளுமன்றத்துக்குள் இருக்கவேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்களை உடனே ஊர்களுக்கு அனுப்பி வையுங்கள் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவும் மழைக் காலநிலையால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆளும்தரப்பு என்ற வகையில் இடர் நிலமைகள் தொடர்பில் அவசர நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அத்துடன் அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டு கட்சி பேதமின்றி இந்த நேரத்தில் எங்களால் வழங்கக்கூடிய ஒத்துழைப்புகளை நாங்கள் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

முப்படையினர், மாவட்ட, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சகல அதிகாரிகளும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் நாங்கள் மதிக்கின்றோம். எதிர்வரும் நாட்களில் இந்த நிலைமை தொடர்பில் ஆளும்தரப்பு அவதானத்துடன் இருக்க வேண்டும்.

தற்போதைய நிலமையில் அபாயப் பிரதேசங்கள் பல இருக்கின்றன. இங்கு மக்களின் உயிர்களைப் பாதுகாக்க ஆளும்தரப்பு உரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக தற்போது விவசாயத்துறைக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலமையில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேசங்களிலேயே இருக்கவேண்டும். நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தாவது மாவட்ட, பிரதேச அபிவிருத்தி குழு தலைவர்களை ஊர்களுக்கு அனுப்பி வையுங்கள்.

அதிகாரிகள்மீது சுமத்திவிட்டு இங்கு இருக்க வேண்டாம். அங்கு சென்று நிலமைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுங்கள் அவ்வாறு இல்லாமல் வெள்ளம் வழிந்தோடிய பின்னர் அங்கு போய் பயனில்லை- என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இனவாதத்தின் இரு பக்கங்கள்

**என்.சத்தியமூர்த்தி**



அண்மையில், தமிழ் அரசு கட்சியில் துவங்கி, மலையகம் உள்ளிட்ட சில தமிழ் அரசியல் குழுவினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வரும் அதிபர் அநுரகுமார, 'இனவாதத்திற்கு' தான் ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டேன் என்று உறுதியாக கூறி வருகிறார். இதே கூற்றை அதிபர் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் கூட அவர் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு கூட்டங்களிலும் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்து வருகிறார்.

அதிபர் அநுரவை தொடர்ந்து, அவரைச் சந்தித்து முடித்துள்ள தமிழ் தரப்புகளும், அவர் கூறுவதை அப்படியே தங்கள் மக்களிடம் எடுத்து சென்ற வண்ணம் இருக்கிறார்கள். தங்களுடைய கொள்கையும் அதுவே என்றும், எனவே, அதிபர் அநுரவின் அறிவிப்பிற்கு தாங்கள் ஆதரவு வழங்குவதாகவும் சாரப்படும் கருத்துகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

ஆனால், ஆங்கிலத்தில் கூறுவது போல், இரு தரப்பினரும் ஒரே பக்கத்தில்தான் இருக்கிறார்களா? ஆங்கிலத்தில் அந்த சொற்றொடர், ஒரு புத்தகத்தின் இரு பக்கங்களை குறிக்கும். தமிழிலும் 'ஒரே பக்கம்' என்ற பதம் இரு தரப்பினரும் ஒரு பிரச்கினையை ஒரு போலவே அணுகிறார்கள், என்றே பொருள்படும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அந்த பதத்தின் சாராம்சம் ஒன்றுதான்.

பதம் எதுவாக இருந்தாலும், அதிபர் கூறுவது ஒன்று, தமிழ் தலைமைகள் புரிந்துகொண்டது மற்றொன்று, என்றே எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறில்லை என்றால், தாங்கள் புரிந்துகொண்டதின் புரிதல் இல்லாதது போல் தமிழ் தலைமைகள் நாடகமாடுகிறார்கள். இனப்பிரச்சினை விடயத்தில், விடுதலை புலிகள் அமைப்பு தொடங்கி,

இனப்போருக்கு பின்னர் 'வாய்ஸ்' கிடைத்த மிதவாத கட்சிகளும் அமைப்புகளும்கூட குறிப்பிட்ட பிரச்சினையைநாடகத்தன்மையோடுதான் அணுகி வந்துள்ளன.

## வெவ்வேறு கோணங்கள்

இன்னும் சொல்லப்போனல், அரசு ஒரு புறமும் தமிழர் தரப்புகள் மறு புறமுமாக, இனப்பிரச்சினையை இரண்டு, வெவ்வேறு கோணங்களிலேயே அணுகி வந்துள்ளன. அதுவும் குறிப்பாக, தென்னிலங்கை அரசியல் மற்றும் தலைமைகள் 'இனவாதத்தை ஒழிப்போம்' என்று சூளுரைக்கும் போதெல்லாம், அவர்கள் உண்மையில் கூறுவது, தமிழர்களின் இனம் சார்ந்த கோரிக்கைகளை நிராகரிப்போம் அல்லது நீர்த்துப்போகச் செய்வோம் என்பதே. குறிப்பாக, விடுதலைப் புலிகள் போன்ற போரளி அல்லது தீவிரவாதக் குழக்கள் மீண்டும் பிறந்து விடாமல் தடுப்போம் என்பதும்தான்.

ஆனால், தமிழர் தரப்புகளோ, 'இனவாதத்தை ஒழிப்போம்' என்று தென்னிலங்கை தரப்புகள் கூறும்போது, அவர்கள் சிங்கள-பௌத்த பேரினவாதத்தை ஒழிப்போம், என்றே கூறுகிறார்கள் என்று தாங்களாகவே அர்த்தப்படுத்தி கொள்கிறார்கள். தமிழர் அரசியலில் தங்களது இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு வேறு வழிகள் குறித்து எண்ணத் தோன்றவில்லை.

எனவே, தாங்கள் அர்த்தப்படுத்திக் கொண்ட விதத்திலேயே தமிழ் மக்களிடம் அதனை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். தங்களது சாயம் வெளுக்கும்போது, 'மீண்டும் பிழை விட்டோம்' என்றோ, 'மீண்டும் ஏமாற்றப்பட்டோம்' என்றோ தங்களது மக்களிடையே அழுது புரண்டு, அழிச்சாட்டியம் செய்கிறார்கள். தென்னிலங்கைக்கு தங்களது கருதல்களையும் கருத்துக்களையும் எடுத்துச் செல்வது குறைவே. அதிலும் குறிப்பாக, 'இனவாதத்தின்' இரண்டு பக்கங்கள் குறித்து தெளிவுபடுத்துவதில்லை.

## இணைப் பயணம்

இந்த விடயத்தில் தென்னிலங்கை மனநிலை மாறவேயில்லை. மாறவும் மாறாது. காரணம், அவர்களைப் பொறுத்தவரையில், 'இனவாதம்' என்ற சொற்றொடரின் பொருள் ஒன்றே ஒன்றுதான். அதுவே தமிழர் தரப்பிற்கும் பொருந்தும். தமிழர்களை பொறுத்தவரை, அந்த சொற்றொடர், 'பேரினவாதத்தை' மட்டுமே குறிக்கும். அதாவது. இரண்டு தண்டவாளங்களும் இணையாகவே, அல்லது ஆங்கிலத்தில் 'பேரலலாகவே' பயணிக்கும். எந்தவொரு புள்ளியிலும் அவை இணையாது.

தற்போதைய சூழலில், இந்தச் சொற்றொடர் பிரயோகம் தெரிவிப்பது என்ன? ஒரு வகையில், தமிழர் தரப்பு, இனப்பிரச்சினைக்கு இந்த அரசிடம் இருந்தும் தீர்வு கிடைக்கும் என்பதை மறந்துவிடவேண்டும். இன்னும் சொல்லப்போனால் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தற்போதைய ஜேவிபி-என்.பி.பி. ஆளும்தரப்பு, இனவாதம் மற்றும் இனப்பிரச்சினை குறித்து கடின போக்கையே கடைபிடிக்கும். அது அவர்களின் வரலாறு சம்மந்தப்பட்ட விடயமும்கூட.

1987ஆம் ஆண்டு, இந்திய-இலங்கை, ராஜீவ்-ஜெயவர்தன ஒப்பந்தத்தை எதிர்த்த ஜேவிபியின் இரண்டாவது ஆயுத கிளர்ச்சி, இரண்டு வருடங்கள் வரை நீடித்தது. முடிவில் தோல்வி, அவர்களுக்குதான். வெற்றி, ஆளும்தரப்பிற்கும் அரச படையினருக்கும் இதிலிருந்து விடுதலை புலிகள் அமைப்பு கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களை கற்றுக்கொள்ளவில்லை என்பது வேறு விடயம்.

ஆனால், ஜேவிபியின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி, தமிழர் பிரச்சினை சார்ந்தது. தமிழர்களுக்கு அதிக அதிகாரம் தருவதற்கு வழிவகை செய்த அரசமைப்பி;ன் பதிமூன்றாவது திருத்தம் மற்றும் அதற்குப் பாலம் போட்ட ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தம் ஆகியவற்றை எதிர்த்தே, அந்தப் போராட்டம் அல்லது ஆயுத கிளர்ச்சி வெடித்தது.

## சித்தாந்த வியாக்கியானம்

குறிப்பாக, அதுவரை தென்னிலங்கையில் ஏழை-பணக்காரன் குறித்த கம்யூனிச சித்தாந்த விடயங்களுக்காக ஆயுதம் ஏந்திய ஜேவிபி, அப்போது, தனது அடிப்படை கம்யூனிச அரசியல் தத்துவத்தையே ஓரம் கட்டியது. அதன் இடத்தில், பேரினவாதம் சார்ந்த தென்னிலங்கையில் சிங்கள-பௌத்த அரசியலுக்கு புதிதாக கம்யூனிச வியாக்கியானத்தை கொடுக்க முற்பட்டு அந்த விடயத்திலும் தோல்வி அடைந்தது.

என்றாலும், அன்று தொடங்கி இன்று வரை, ஜேவிபியை பொறுத்தவரை, பேரினவாத அரசியலுக்கே முன்னுரிமை அளித்துள்ளது. அண்மையில், 2022 அரகலயா போராட்டமே, தற்போதைய மிதவாத ஜேவிபி தலைமையினருக்கும், தங்களுடைய ஒரிஜினல் கருத்தாக்கங்கள் குறித்து ஒரு மேம்போக்கான எண்ணவோட்டத்தை நினைவூட்டியது. என்றாலும், அவர்களை பொறுத்தவரையில், அறகலயா என்பது ஆட்சி மாற்றத்திற்கான வழி மட்டுமே.

ஜேவிபி-யினரை குறித்தவரையில,; குறிப்பாக தாங்கள் இத்தனை தசாப்தங்களுக்குப் பிறகு, அடிமட்ட மக்களின் முன்னரே நிருபிக்கப்பட்ட ஆதரவு இல்லாமலே, ஜனநாயக முறையில் ஆட்சியை அவர்கள் பிடித்தார்கள். அதனைத் தக்க வைத்துக்கொள்ளவே அரர்கள் தற்போது அரசியல் ரீதியாக, அரசு ரீதியாகப் போராடுகிறார்கள். அதற்கு அவர்களுக்கு பழைய கொள்கை ரீதியான சின்னங்கள் அவசியம்.

இன்னும் சொல்லப்போனால், ஆட்சியில் அமர்ந்த பிறகு, தங்களுக்கு இருப்பதாக மக்களை ஏமாற்றி வந்த பொருளாதாரக் கொள்கையை அவர்கள் காற்றில் பறக்க விட்டுவிட்டார்கள். எனவே, பேரினவாதம் சார்ந்த 'இனவாத' அரசியலே அவர்களது தற்போதைய துடுப்பு. ஒரே துருப்பு சீட்டும்கூட.

## எங்கே, எப்படி?

இந்தப் பின்னணியில் தமிழர் தரப்பு(கள் என்ன செய்யப் போகின்றன? அநுர அரசின் பேரினவாத கொள்கையை இல்லை என்று நம்புவதா, அல்லது அவர்களது தற்போதைய பம்மாத்து வேலையை அம்பலப்படுத்துவதா? இதில் முதலாவதை அவர்கள் தேர்ந்தெடுப்பார்களேயானால், 'மீண்டும் பிழைவிட்' வாய்ப்பு இருக்கிறது. இல்லை, அவர்களை அம்பலப்படுத்தப் போகிறார்கள் என்றால், எங்கே, எப்போது, எப்படி?

இது போன்ற முயற்சி பாதி கிணறாவது தாண்ட வேண்டுமென்றால், அதற்குத் தமிழர் தரப்புகள் அனைத்துமே ஒன்று சேர வேண்டும். அவர்களை ஒன்றிணைக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்த சம்மந்தன் தற்போது நம்மிடையே இல்லை. இப்போதைய தமிழர் அரசியல் எல்லாம் சுமந்திரனை மையமாக வைத்தே, ஆதரவு-எதிர்ப்பு என்று இருதுருவங்களுக்குள் இயங்குகின்றன. அங்கு இனப்பிரச்சினைக்கோ, இனவாதத்திற்கோ, குறிப்பாக பேரினவாதத்திற்கோ இடமில்லை. ஈகோ மோதலுக்கு மட்டுமே அங்கு இடமுள்ளது.

இது போதாது என்று, கடந்த நாடாளுமன்ற தேர்தல் தொடக்கம், தமிழர் பகுதிகளில் ஆளும் கூட்டணி நன்றாகவே கால் பதித்துவிட்டது. பின்னர் அரங்கேறிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில், தனித்தனியாகவும் கூட்டாகவும் நின்ற தமிழ் கட்சிகள், இழந்துவிட்ட மானத்தை சிறிது திருப்பித் தக்கவைத்துக்கொண்டாலும், அவர்களால் ஜேவிபி அணியை இல்லாது ஆக்கிவிட முடியவில்லை.

இந்த நிலமை மாறவேண்டுமென்றால் அடுத்து வரும் தேர்தலில் அல்லது தேர்தல்களில், தமிழர் கட்சிகள் ஜேவிபி-க்கு தமிழர் வாக்குகள் கிடைக்காமலிருக்க பண்ண வேண்டும். அது, அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்தால்மட்டுமேசாத்திப்படும்வாய்ப்பாவது உள்ளது. என்றாலும், ஒரு குறிப்பிட்ட பகுதி தமிழ் வாக்காளர்கள், ஜேவிபி அணிக்கு தொடர்ந்து வாக்களிப்பார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

## அப்பமட்டமான உண்மை

தற்போது உள்ள சூழ்நிலையில், அடுத்த வருடம் நடத்துப் போவதாக அரசு உறுதி அளித்துள்ள மாகாண சபை தேர்தல்கள், நடந்தேறினால் மட்டுமே, இது போன்ற கேள்விகளுக்கு விடை தெரிய வாய்ப்பு உள்ளது. ஆனால், ஆளும் கட்சி தலைவர்களான ரில்வின் சில்வா போன்றவர்களது கூற்றின்படி, அநுர அரசு, மாகாண சபைகளை கலைப்பதிலேயே குறியாக இருக்கிறது என்பது அப்பட்டமான உண்மை.

இதற்கிடையில், தனது புதிய அரசமைப்பு சட்டத்திற்கான பேச்சு வார்த்தைகளை அடுத்த ஆண்டு தொடக்க இருப்பதாக. அதிபர் அநுர, தமிழ் அரசு கட்சி தலைவர்களிடம் தெரிவித்துள்ளார். அப்போதாவது பூனை வெளியே வந்து தானாகவேண்டும். அதாவது, புதிய அரசமைப்பில், மாகாண சபைகள் தொடருமா, அல்லது, ரில்வின் சில்வா கூறி வருவது போல், மாகாண சபை இல்லாத, அனைத்து இனத்தவர்களின் எதிர்பார்ப்புகளையும் நிவர்த்தி செய்யும் ஒரு தீர்வுத் திட்டம் முன் வைக்கப்படுமா என்பது, அப்போதுதான் தெரியவரும்.

இதில் இரண்டு விடயங்கள். ஒன்று, மாகாண சபை இல்லை என்று அரசு முடிவு செய்தால், அல்லது அவ்வறான தீர்வு திட்டத்தை முன் வைத்தால், தமிழ் தலைமைகளின் முடிவுகள் எவ்வாறு இருக்கும்? அந்த பிரச்சினையை முன்னிறுத்தியே அவர்கள் அநுரவின் தீர்வு திட்டம் அல்லது புதிய அரசமைப்பு சட்ட வடிவை எதிர்ப்பார்களா? அல்லது, அரசு அதற்கு பதிலாக தன்னிடம் இருப்பதாக கூறும் மாற்று திட்டம் முன்வைக்கப்பட்டால், அதனை சீர்தூக்கிப் பார்த்து, அதன் பின்னர் முடிவு எடுப்பார்களா?

## அடிக்கொரு முறை

நேற்று அனுஷ;டிக்கப்பட்ட விடுதலை புலிகளின் 'மாவீரர் தினத்தை' ஒட்டி உரையாற்றிய பல்வேறு தமிழ் தலைவர்களும் கடந்த காலத்திலேயே நின்று நிகழ் காலத்தை மீண்டும் ஒரு முறை உற்று நோக்கினார்களா. அது குறித்தே கஜேந்திரகுமார் உள்ளிட்ட சில தலைவர்கள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் கருத்து தெரிவித்தார்கள்.

குறிப்பாக நாடாளுமன்றத்தில், ஒரு நாள் முன்னதாக பேசிய கஜன் பொன்னம்பலம், விடுதலை புலிகள் அமைப்பின் நிறுவனர் பிரபாகரனை 'உலக தமிழர்களின் தலைவர்' என்று அறிவித்து பேசினார். மீண்டும், அவரை போன்றவர்கள், தமிழ் இனம் என்பதே யாழ் தீபகற்பத்தினுள் அடங்கி விட்டது என்று கருதி பேசுகிறார்களா. அல்லது, உலக தமிழர்களை அவ்வாறு நம்ப வைக்க இன்னமும் முயற்சிக்கிறார்கள். ஆனால், இவர்களே கடந்த காலத்தில், என்னவென்ன பேசினார்கள், அல்லது பேசாமல் விட்டார்கள் என்பது அவர்களது மனசாட்சிக்கே புரியும்.

தற்போதைய சூழலில் அவர்கள் செயய வேண்டியதெல்லாம், நிகழ் காலத்தில் இருந்து எதிர்காலத்தை நோக்கி, ஆரூடம் சொல்வது தான். அதன் அடிப்படையின் தங்களது ஒருமித்த அல்லது பிரிந்துபட்ட அரசியல் திட்டங்களை வகுப்பது தான். அவ்வாறு செய்யும் போது, அடிக்கொரு தடவை திரும்பி பார்த்து, தங்கள் பின்னார், எத்தனை தமிழர்கள், குறிப்பாக இளைய சமூகத்தினர் அணி வகுத்து நிற்கிறார்கள் என்பதை சரிபார்த்துக் கொள்வதுதான்

## பேரெழுச்சியோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள்மிகவும்அமைதியாககண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சி குடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் நினைவுச்சுடர்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன. கஞ்சிகுடிச்சாறு மாவீரர்கள் துயிலும் இல்லத்தில் கடந்த 1993ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டுவரை தமிழீழ விடுதலைப் புலி களினால் தீபம் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது.

### திருகோணமலை, ஆலங்குளம்

திருகோணமலை,ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு கள் கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் பங்குபற்றினர்.

### முல்லை, இரணைப்பாலை

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி மடிந்த வீரர்களை நினைவு கூரும் வகையிலல் கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் முல்லைத்தீவு இரணைப்பாலை துயிலு மில்லத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று மாலை இடம் பெற் றது. இந்த அஞ்சலி நிகழ்வில் மாவீரர் டிசாந்தியின் தந்தை கணேஸ் பொதுச்சுடரை ஏற்றினார்.

### முல்லை. கள்ளிக்காடு

கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் முல்லைத்தீவு கோடாலிக்கல்லு களிக்காடு துயிலுமில்லத்தில் அஞ்சலி நிகழ்வானது அனுஷ்டிக்கப்பட்டது. குறித்த அஞ்சலி நிகழ்வில் லெப்டி னன்ட் கேணல்நவம் (டாடி) அவர்களின் சகோதரிகள் மூன்று பேர் பொதுச்சுடரை ஏற்றினார்கள்.

### மட்டு, தாண்டியடி

மட்டக்களப்பு மாவட்டம் தாண்டியடி துயிலு மில்லத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்குபற்றினர்.

### தமிழ் அரசுக் கட்சி

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் மாவீரர் நாள் நினைவு கூரல் நிகழ்வு கட்சியின் தலைவர் சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மதிவதனி கலந்துகொண்டு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் யாழ்ப்பாணம் தொகுதிக் கிளையின் தலைவர் சிறில், செயலாளர் ஆனல்ட், மாநகர பிரதி முதல்வர் தயாளன், கட்சியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் மாவீரர் தின நிகழ்வு நேற்று மாலை கட்சியின் வவுனியா மாவட்ட தாயகம் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதான திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலியும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்களால் பிரதானதிருவுருவபடங்களுக்குதீபமேற்றியும் மலர்தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

### சமத்துவக் கட்சி

கிளிநொச்சிசமத்துவக்கட்சிஅலுவலகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டில் நேற்று மாலை உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் அரசியல்துறை போராளியுமான வேங்கை தலைமையில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் மாவீரர்களான ஒளிவேங்கை மற்றும் ஒளியழகு ஆகியோரின் தாயார் பொதுச்சுடரைஏற்றிவைக்கஏனையசுடர்களும் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. மண்ணுக்காய் மரணித்தவர்கள் நினைவு கூரப்பட்டனர். இந் நிகழ்வில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சந்திரகுமார், கட்சியின் அமைப்பாளர்கள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கலந்துகொண்டனர்.

### முதல் மாவீரன்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதனுக்கு ஈகச்சுடரேற்றி நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்பாக ஈகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர் சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

## கிவுள் ஓயா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பானச அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் மக்கள் தொகையில் 30 வீதமானோர் விவசாயிகளாக இருக்கின்றனர். இவ்வாறான நிலைமையில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் இந்த விவசாயிகள் 7 முதல் 8 வீதம் வரையிலான பங்களிப்பையே வழங்குகின்றனர் என்று புள்ளி விவரம் கூறுகின்றது. இதனால்தான் நாங்கள் உணவுப்பொருட்களைவெளிநாட்டில்இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, எமது வவுனியா மாவட்டத்தில் கிவுல்ஓயா திட்டத்திற்காக 2500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம்நடைமுறைப்படுத்தப்படும்போது அங்கு வாழும் தமிழ் மக்களுடைய பல குளங்கள் மற்றும் பல காணிகள் இந்த நீரேந்துப் பகுதிக்குள் செல்லக்கூடுமென்ற அச்சம் உள்ளது. இதனால் மக்கள் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிடுகின்றனர்.

கடந்த ஆளும்தரப்பால் இனவாத நோக்கத்தில் குடியேற்றப்பட்ட, எமது மாகாணத்திற்கேதொடர்பில்லாதமக்களுக்கான வாழ்வாதாரத்தை உருவாக்கவே இந்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளாதாகக் கருதப்படுகின்றது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால்அங்குபூர்வீகமாக வாழும் மக்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தி, புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தும். இந்தத் திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் வெளிப்படைத் தன்மை இருக்கவில்லை. அதனால் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து வெளிப்படைத் தன்மையுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவேண்டும். வீண் பிரச்சினைகளை தோற்றுவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## புயலாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்கிழக்கே சுமார் 120 கி.மீ தொலைவில், நிலை கொண்டிருந்தது.

இது நேற்று மாலை 6 மணியிலிருந்து அடுத்த 12 மணி நேரத்தில் வடக்கு - வடமேற்கு நோக்கி நகர்ந்து, சூறாவளிப் புயலாக வலுப்பெறும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் தாக்கத்தால், அடுத்த சில நாட்களுக்குத் தீவு முழுவதும் நிலவும் பலத்த மழை மற்றும் பலத்த காற்று தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. குறிப்பாகநாட்டின்பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்என்றும்,அவ்வப்போதுமழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக 200 மி.மீ இற்கு மேல் மிக அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் இவ்வாறு அதிகூடிய மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

சப்ரகமுவமற்றும்மேல்மாகாணங்களிலும், பதுளைமற்றும்மட்டக்களப்புமாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மி.மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சியும், ஏனைய பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சியும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்துக்கு சுமார் 60-70 கி.மீ வேகத்தில், சில சமயங்களில் மணிக்கு 80 கி.மீ வரை அதிக வேகத்தில் காற்று வீசக்கூடும். பலத்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக ஏற்படும் சேதங்களைக் குறைக்கப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

### 300 மி.மீ மழை வீழ்ச்சி

நேற்றைய தினம் கண்டி மாவட்டத்தில் 300 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. உடுதும்பர பிரதேச செயலகத்துக்குட்ப பகுதிகளில் 373 மி.மீ., பதுளையில் 225 மி.மீ., கேகாலையில் 180 மி.மீ. என மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எதிர்வரும் இரு தினங்களுக்கு இவ்வாறு அதி கூடிய மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### மண் சரிவு சிவப்பு எச்சரிக்கை

பதுளை - ஹாலிஎல, பசறை, வெலிமட, ஊவா பரணகம, மீகஹாகிவுல, கந்தகெடிய மற்றும் லுணுகல பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், கண்டி - உடுதும்பர, மினிபே, தொலுவ, மெதும்பர, பஹதஹேவாஹெட்ட, இஹல கோரள, உடபலாத்த, தெல்தோட்டை, கங்கவட்ட கோரள, அக்குரணை, உடுநுவர, யட்டிநுவர, பஹததும்பர, தும்பனே, பஸ்பாகே கோரள, பன்வில, ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டி, குண்டசாலை மற்றும் ஹதரலித்த பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் மண் சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை - ரம்புக்கனை, அரநாயக்க, மாவனல்ல, புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், குருணாகல் - மல்லவபிட்டி, மாவத்தகம, ரிதீகம பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், மொனராகலை - பிபில மற்றும் மெதகம பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், நுவரெலியா - வலப்பனை, ஹங்குராங்கெத்த, நில்தன்டாஹின்ன, கொத்மலை, தலவாக்கலை, அம்பகமுவ மற்றும் நோர்வூட் பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவை தவிர கொழும்பு, காலி, கம்பஹா, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் சில பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் மண் சரிவு அபா எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### வெள்ள எச்சரிக்கை

தொடர் மழை காரணமாக கல் ஓயா, முந்தெனியாறு, மதுரு ஓயா, யான் ஓயா, மகாவலி கங்கை, ஹெத ஓயா, கும்புக்கன் ஓயா, தெதுரு ஓயா, கலா ஓயா, களனி கங்கை, மகா ஓயா, நில்வளா கங்கை, மல்வத்து ஓயா, மீ ஓயா என்பவற்றின் நீர் மட்டம் உயர்வடையக் கூடும் என்பதால் அவற்றை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

சீரற்ற காலநிலையைக் கருத்திற்கொண்டு மறு அறிவித்தல் வரும் வரை, நாட்டைச் சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பகுதிகளிலும், ஆழ்கடல் பகுதிகளிலும் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தீவைச் சூழவுள்ள கடல் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60-70 கி.மீவரை அதிகரிக்கக்கூடும். அத்துடன் இந்தக் கடல் பகுதிகள் கொந்தளிப்பாக அல்லது மிகக் கொந்தளிப்பாக இருக்கக்கூடும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஊடாகக் காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளில், கரையிலிருந்து விலகிய கடல் அலைகளின் உயரம் சுமார் 2.5-3.5 மீட்டர்கள் வரை உயரக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. (இது கரையை நோக்கி வரும் அலைகளின் உயரம் அல்ல).

தற்போது கடல் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உடனடியாக அங்கிருந்து செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீன்பிடி மற்றும் கடற்படை சமூகத்தினர், இது தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிவிப்புகள் குறித்துத் தொடர்ந்து கவனத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## பல உயிர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

நாட்டில் பெருளமவு அழிவு ஏற்பட்டுள்ள நிலையில் ஆளும்தரப்பு இன்னும் இடர் நிலையை அறிவிக்காமல் இருப்பது கவலைக்குரியது. வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளதன் பிரகாரம் தென்கிழக்கு திசையில் 170 கிலோ மீட்டருக்கு அதிக தாழ் அமுக்க நிலைமை ஏற்பட்டு, அது சுழல் காற்றாக மாறியுள்ள நிலையில், ஆளும்தரப்பு இன்னும் இடர் நிலையை அறிவிக்காமல் இருக்கிறது.

2025 13ஆம் இலக்க இலங்கை பேரிடர் முகாமைத்துவசட்டத்தின்11ஆம்உறுப்புரையில் பேரிடர் நிலையை அறிவிப்பு செய்வதன் மூலம் மிகவும் விரைவாக, இடர் நிலைக்கு ஆளாகும்குடும்பங்களுக்குநிவாரணங்களை வழங்க முடியும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஆலோசனை வழங்கி, பேரிடர் நிலையை அறிவிக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இதுதொடர்பில் அரசுத் தலைவர்க்கு தெரிவித்தபோதும் இதுவரை அதனை மேற்கொள்ளவில்லை என்பதுடன் குறைந்தபட்சம்அரசாங்கத்துக்குஇதுதொடர்பில் இருக்கும் சட்ட திட்டங்கள் தொடர்பில் அறியாமல் இருக்கிறது.

அதேநேரம் சீரற்ற காலநிலை காரணமாக பாரிய இடர்ம் ஏற்பட்டு, உயிரிழந்த, இருப்பிடங்களை இழந்த, பாதிப்புகளுக்கு உள்ளான எமது நாட்டின் மக்களுக்கு உதவி, ஒத்தாசைகளை வழங்கும் அரச அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினருக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்பட்டுள்ள இடர் நிலைமை காரணமாக துன்பங்களுக்கு, அழுத்தங்களுக்கு மற்றும் பாதிக்கப்புக்குளாகியுள்ள மக்களுக்கு தேவையான நிவாணங்களை வழங்கி, அவர்களுக்குஓரளவுஆறுதலைவழங்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இடர் நிலையை அறிவிப்பு செய்து,உயிரிழந்தவர்களுக்கும்சொத்துக்களை இழந்தவர்களுக்கும் வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கும் உதவி வழங்கும்போது, காலம் கடந்த சுற்றறிக்கைகளை நீக்கி, காலத்துக்கு ஏற்றவகையில் அவற்றை செயற்படுத்துமாறும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறும் ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம்.

அம்பாறை மாவட்டத்தில் இடர்ங்களுக்கு ஆளாகியவர்களுக்கு இன்றுவரை உதவிகள் இல்லாமையால், தற்போதாவது அவற்றை வழங்குமாறும் கோருகின்றோம். அதற்கேற்ற வகையில் பேரிடர் முகாமைத்துவ மற்றும் இடர் முகாமைத்துவ சட்டமும் மாற்றப்பட வேண்டும்.

இடர் முகாமைத்துவ துறையில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக்கொடுக்கவேண்டும். இடருக்குப் பின்னரான நடவடிக்கைகளில் காணப்படும் மந்தநிலை காரணமாக, ஆளும்தரப்பு இதுதொடர்பாகவும் தற்போதாவது சிந்திக்க வேண்டும் - என்றார்.

## 3 ஏ.எல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார்.

கடும் மழை மற்றும் கடும் காற்றுடனான காலநிலை நிலவி வருவதனால் பல மாவட்டங்களும் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே பரீட்சைகள் இடைநிறுத் தப்பட்டுள்ளன.

பாதிப்புகளுக்கு மத்தியில் பரீட்சை எழுதுவதில் உள்ள சிக்கல்களை கவனத்தில் கொண்டுஇந்ததீர்மானம்எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

மூன்றுதினங்களிலும்திட்டமிடப்பட்டுள்ள பரீட்சைகள் முறையே டிசம்பர் 7, 8 மற்றும் 9 ஆகிய நாள்களில் நடைபெறும். காலநிலை மாற்றங்களுக்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பரிட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நேர அட்டவணைக்கமைய ஏனைய பரீட்சைகள் திங்கட்கிழமை முதல் இடம்பெறும் என்றும், குறித்த மூன்று தினங்களில்திட்டமிடப்பட்டிருந்தபரீட்சைகளை நடத்துவதற்கான தினங்களில் மாத்திரமே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## தேசிய காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது வெற்றிப் பெறவில்லை. தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்க ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பானச அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் கோட்டபய ராஜபக்ச தலைமையிலான ஆளும்தரப்பு ஓரிரவில் இரசாயன உரத்தைத் தடைச்செய்து, சேதன பசளைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதால் நாட்டின் தேசிய விவசாயத்துறையும் வீழ்ச்சியடைந்தது. இந்தத் தன்னிச்சையான, முட்டாள்தனமான தீர்மானத்தால் நாட்டில் தானியத் தன்னிறைவும், திறைசேரியின் தன்னிறையும் இல்லாதொழிந்தன. அதன் பாதிப்பை முழு நாடும் இன்றும் எதிர்கொள்கிறது.

முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆளும்தரப்பின் விவசாயத்துறை அமைச்சராக பதவி வகித்தவரை கடந்த அரசுத் தலைவர்த் தேர்தலில் அரச தலைவராக மக்கள் தெரிவு செய்தார்கள். விவசாய மாவட்டத்தில் இருந்து வந்தவர், ஆகவே தமது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அவர் மூலம் தீர்வு கிடைக்கும் என்று விவசாயிகள் கருதினார்கள். ஆனால் இன்றுவரை விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தவுடன் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அரசுத் தலைவர் பிரதான அரிசி உற்பத்தியாளர்களை அழைத்து பேச்சு நடத்திய பின்னர் அரிசியின் விலையை 10 ரூபாவால் அதிகரித்தார். இதனால் அரிசி உற்பத்தியாளர்கள்தான் பயனடைந்தார்கள். விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

அரிசி மற்றும் தானியங்கள், மரகறிகளுக்கு உத்தரவாத விலை இல்லாத காரணத்தால் விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். விவசாயிகளை நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டு நாட்டைச் சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது. கடந்த காலங்களிலும் இவ்வாறான நிலையே ஏற்பட்டது என்பதை ஆளும்தரப்பு கருத்திற்கொள்ளவேண்டும்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விவசாயிகளின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஆட்சிமாற்றம் ஏற்பட்டவுடன் இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஆகவே இத்திட்டத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அத்தியாவசியமானது. நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் காணிச் சட்டங்களைத் திருத்தம் செய்து அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். காணிப் பராமரிப்புக் கொள்கைத் திட்டமிடல் சட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே அது குறித்து விசேட கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்காதகாரணத்தால் இன்றளவில் தேசிய காணி கொள்கை ஒன்றை தயாரிக்க முடியாதுள்ளது. தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்குவதற்குக்கடந்த காலங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது வெற்றிப் பெறவில்லை. ஆகவே தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## கண்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மகன் இருவர் உயிரிழந்துள்ளனர் என கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

முதலில் மூன்றுபேர் உயிரிழக்கநால்வரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் 7 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மேலும் 8 பேர் வரையிலானோர் காணாமல் போயிருக்கக்கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

மஹவெலநிலச்சரிவில் உயிரிழந்தவர்களில் ஒருவர் 18 வயதுப் பாடசாலை மாணவர் எனவும் அறியப்படுகிறது. உடுதும்பர, கங்கொட பிரதேசத்தில் பல வீடுகள் நிலச்சரிவுக்கு உள்ளாகியுள்ளன. அங்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் மற்றும் மற்றொரு நபரின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டதாக உடுதும்பர பொலிஸார் தெரிவித்தனர்.

மண்ணுக்குள் முழுவதுமாகப் புதைந்த வீடுகளில் சுமார் 15 பேர்வரை இருந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதிக மழையுடன், வீட்டுக்குப் பின்னால் இருந்த மண்மேடு நள்ளிரவு சுமார் 11:00 மணியளவில் சரிந்து, பல்லேகம தம்பதியினர் இருந்த அறை முழுவதும் மண்ணுக்குள் புதைந்தது.

இவர்கள் ஹேரத் முதியன்சலாகே காமினி ஹேரத் (76) மற்றும் ஜம்புக்கஹகெதர பொடி மேனிக்கே (78) எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பிரதேசவாசிகள் இரண்டு மணி நேரம் போராடி அவர்களை மீட்டபோதும், அவர்கள் ஏற்கனவே உயிரிழந்திருந்தனர். அதிக மழையால் சாலைகள் தடைப்பட்டதால், பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து சேரவே சுமார் இரண்டு மணி நேரம் எடுத்துள்ளது.

சம்பவம் நடந்தபோது தம்பதியினர் மட்டுமே வீட்டில் இருந்தனர் எனவும், அவர்களின் மகன் வெளியே இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சடலங்கள் உடற்கூறாய்வுக்காகக் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உடுதும்பர கங்கொட கிராம சேவா வட்டத்தில் சுமார் 10 வீடுகள் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வீடுகளில் இருந்தவர்களை மீட்க இராணுவம், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மீட்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர்.

கண்டி-மாத்தளை தொடருந்து வீதியில் யடிராவண பகுதியில் மூங்கில் புதருடன் கூடிய மண்மேடு சரிந்ததால், தொடருந்து போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கண்டி-மஹியங்கனை பிரதான வீதியின் உடுதும்பரக்கும் ஹுன்னஸ்கிரியவுக்கும் இடையேயான எலமல்பொத்த பகுதியில் மண்மேடு மற்றும் பெரிய பாறாங்கற்கள் சரிந்ததால், வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என கண்டி மாவட்டச் செயலாளர் இந்திக உடவத்த அவர்கள் அறிவித்தார்.

அதிக மழை காரணமாகக் கொத்மலை, பொல்கொல்ல, விக்டோரியா, ரந்தெணிகல மற்றும் ரண்டம்பே ஆகிய அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழிகின்றன என மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## சுதந்திரமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) கார்த்திகை 27 மாவீரர் தினம். இந்தவாரத்தில் எமது மண்ணுக்காகவும் மண்ணின் விடுதலைக்காகவும், தமிழ் மக்களின் எதிர்காலத்திற்காகவும் தங்களை தியாகம் செய்த சகல மாவீரர்களுக்கும் எனது அஞ்சலியை உயரிய சபையில் செலுத்துகின்றேன்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் இரண்டாவது தடவையாக இந்த மாவீரர் தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்த வருடத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். வடக்கு, கிழக்கு முழுவதும் மக்களுக்கு சுதந்திரமான முறையில் தமது அஞ்சலியை செய்யும் வாய்ப்பை இந்த ஆளும்தரப்பு வழங்கியுள்ளது. வடக்கு, கிழக்கு முழுவதும் மக்கள் எமது மண்ணுக்காக இழந்த உறவுகளை மக்கள் நினைவுகூரும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து சுதந்திரமான முறையில் அதனை நடத்துகின்றனர்.

எவ்வாறாயினும் ஒரு கோரிக்கையொன்றை முன்வைக்க வேண்டும். ஆளும்தரப்புக்கள் வந்த முதல் இரண்டு வருடங்களில் அனுமதியளிப்பார்கள். பின்னர் அந்த அஞ்சலி நிகழ்வுகளை முன்னின்று ஏற்பாடு செய்பவர்களை அடையாளம் கண்டு கடைசி இரண்டு வருடங்களில் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்தல், விசாரணைசெய்தல் மற்றும் சிறைத்தண்டனை வழங்குதல் என்பன நடந்துள்ளன. அந்த வகையில் உங்களின் ஆட்சிக் காலத்தில் முதல் இரண்டு வருடங்களில் நடந்தது போலவே, அரசியல் காரணங்களுக்காக போராடி உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வழங்கியுள்ள வாய்ப்புக்காக நன்றியைக் கூறவேண்டும்.

எங்களின் விடுதலைப் போராட்டத்தில் எத்தனையோ ஆயிரம் மாவீரர்களை இந்த மண்ணிலே விதைப்பதற்கு மிக முக்கியமான காரணங்களில் குடியேற்றத் திட்டங்கள் இருந்தன. நீர்பாசன திட்டங்களை மறைமுகமாகக் காட்டியே குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன . அம்பாறை என்ற மாவட்டமே இருக்கவில்லை. அங்கு சேனாநாயக்கதிட்டம், கல்லோயாதிட்டங்கள் ஊடாக அந்தப் பிரதேசங்களில் வேறு பிரதேசங்களில் இருந்து மக்களைக் குடியேற்றி, வடக்கு மற்றும் கிழக்கில் இருக்கும் மக்களின் விகிதாசாரத்தை மாற்றியமைப்பது முக்கியமான காரணமாக இருந்தது.

மாவீரர்களின் தியாகங்களுக்கு மக்கள் பிரதிநிதியாக நாங்கள் நீதி வழங்குவதாக இருந்தால் அவர்களின் இலக்கு போராட்டம் தனிநாட்டுக்காக இருந்தது. ஆனால் இன்று நாங்கள் ஒரு இலங்கைக்குள் அரசியல் தீர்வை நோக்கி பயணிப்பதையாவது குறைந்தபட்சம் சாதிக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினராக மக்கள் பிரதிநிதியாக நாங்கள் குழப்பமான சூழலில் மக்கள் அச்சுறுத்தப்படும் போதெல்லாம் நாடாளுமன்ற அமர்வுகள் இருந்தபோது நாங்கள் மக்களோடு மக்களாக அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டோம். இன்று சுதந்திரமான முறையில் அஞ்சலி செலுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கும் போது, இந்த விவாதத்தில் மாவீரர்களின் அபிலாசைகளை அடையக்கூடிய வகையில் எங்களின் நேரத்தை பயன்படுத்த வேண்டுமென்றே இந்த விவாதத்தில் கலந்து கொள்கிறேன்.

எங்களுடைய மண்ணே எங்களின் சொத்து, நாங்கள் சுயநிர்ணய உரிமையை கோருவதால் எங்களின் நிலத்தை அபகரிப்பு செய்யக்கூடாது. இந்த அரசாங்கத்திலும், இவ்வாறானநடவடிக்கைக்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. இன்றுவடக்கு மற்றும் கிழக்கில் மாவீர்களுக்கு அஞ்சலி செலுத்தவும், மாவீரர்கள் உயிர்த்தியாகம் செய்வதற்கும் எங்களின் நில அபகரிப்பே பிரதான காரணம் , தொடர்ந்தும் இதற்கு அனுமதி அளிக்க முடியாது - என்றார்.

## 323 கொள்கலன்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று கூடியபோது சபைக்கு அறிவிப்புக்களை விடுக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு துறைமுகத்தில் இருந்து பரிசோதனைகள் ஏதுமின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் ஆராய்ந்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமைத்துவத்தில் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தெரிவுக்குழுவின் உறுப்பினர்களாக அநுர கருணாதிலக, சதுரங்க அபேசிங்க, சுனில் வட்டகல, ஹர்கம் இல்யாஸ், தயாசிறி ஜயசேகர, அஜித் பி பெரேரா, சானக, முஜிபூர் ரஹ்மான், நஜித் இந்திக, ஜெகதீஸ்வரன், லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# முல்லை ஓய்வு நகர்

## Mullai Rest City

**எழுதுமட்டுவாழ் நகரில்**
**2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!**

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*



**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்







4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City





### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**A** – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

**B** – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)


**C** – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

**0777 43 55 57**





புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722




# JDR CARE HOME & MEDICALS

முத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு



## FACILITIES

Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care





## BOOK NOW

0701348384

46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# டிஜிட்டல் அ.அட்டைகள் தயாரிப்பு ஒப்பந்தங்களை வெளியிடமுடியாது

## பிரதி அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

டிஜிட்டல்அடையாளஅட்டையைத்தயாரிக்கும்செயன்முறை தொடர்பானஅனைத்துஒப்பந்தங்களையும்சபையில்சமர்ப்பிக்க முடியாது.இருதரப்பு இராஜதந்திர ஒப்பந்தங்களின்படி, இந்த ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை ஒருதலைப்பட்சமாக வெளியிட முடியாது என்று டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் குடிமக்களுக்கு ஒரு டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும். இந்த டிஜிட்டல் அடையாள அமைப்பின் அறிமுகம் இலங்கையின் டிஜிட்டல் உருமாற்றப் பயணத்தில் ஒரு முக்கியமான படியாகும்.

நம்பகமான அடையாளம், ஒரு தனிநபரின் பிறப்பு முதல் இறப்பு வரை 100 சதவீத நம்பகமான அடையாளக் காப்பீட்டை உறுதிசெய்து, ஒரு தனிநபரின் வாழ்நாள் முழுவதும் சேவைகளுக்கான தொடர்ச்சியான அணுகலை வழங்குகிறது.

வினைத்திறனான பொது சேவை குடிமக்கள் அரசு சேவைகள் மற்றும் தனியார் துறை சேவைகளை (வங்கி, சுகாதாரம், கல்வி போன்றவை) மிகவிரைவாகவும்,எளிதாகவும், ஆன்லைன் முறைகள் மூலமாகவும் அணுக உதவுகிறது, தனிப்பட்ட அடையாளங்களைப் பாதுகாக்க முடியும், சரிபார்க்க முடியும் என்பதால், நலன்புரி சலுகைகள் விநியோகம் போன்ற நடவடிக்கைகளில் மோசடி செயல்கள் மற்றும் முறைகேடுகள் கிட்டத்தட்ட முற்றிலுமாக நிறுத்தப்படமுடியும். அனைத்துக் குடிமக்களும் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் நிதி அமைப்புகளுடன் (நிதி உள்ளடக்கம்) எளிதாக இணைக்க உதவுகிறது.

தேசிய பாதுகாப்பு தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்க செயல்முறைகளுக்கு துல்லியமான மற்றும் நம்பகமான தரவு அமைப்பாக செயல்படுதல், பல்வேறு சேவைகளுக்கு ஆவணங்கள் மற்றும் தகவல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியத்தை நீக்கி, ஒற்றை சரிபார்க்கப்பட்ட அடையாளத்தின் அடிப்படையில் செயல்படும் திறன் ஆகியன இத்திட்டத்தின் நன்மைகளாக காணப்படுகிறது.

குடிமக்களுக்கு தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவது என்பது ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால்நிர்வகிக்கப்படும்பலகட்டசெயல்முறையாகும். இந்த டிஜிட்டல் அடையாளத்தை தயாரிப்பதற்கான முறை சர்வதேச தரநிலைகளுக்கு (ICAO மற்றும் ISO) இணங்க மிக உயர்ந்த பாதுகாப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குடிமக்களின் மக்கள்தொகைத் தகவல் (பெயர், முகவரி, பிறந்த தேதி) மற்றும் பயோமெட்ரிக தகவல்கள் (கைரேகைகள், கருவிழி ஸ்கேன் மற்றும் முக புகைப்படம்) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் இத்திட்டத்துக்கான செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகிறது.

டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகப்படுத்துவதற்கு இந்திய அரசின் மானிய உதவி மற்றும் இலங்கை அரசின் நிதி ஒதுக்கீடுகள் பெறப்படுகிறது.அந்த அடையாள அட்டையைத் தயாரிக்கும் செயன்முறையில் முதலீடு செய் முதலீட்டாளர்களுக்கு இந்திய ஆளும்தரப்பின் உதவியுடன்,இந்த டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கும் முறை இந்திய நிறுவனங்கள் மூலமாகவே செயல்படுத்தப்பட வேண்டும்,மேலும் முதலீடு செய்பவர்களுக்கு வேறு எந்த சிறப்பு சலுகைகளும் கிடைக்காது.அந்த முதலீட்டாளர்களால் தனிப்பட்டவர்களின் தரவுகளைப் பெற முடியாது என்பது உறுதியளிக்க முடியும்.

இந்தத் திட்டத்திற்கு ஆளும்தரப்பு அளித்துள்ள மிக உயர்ந்த முன்னுரிமை இதுவாகும். குடிமக்களின் தரவுகளின் முழுமையான பாதுகாப்பு மற்றும் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு ஆளும்தரப்பு முழு உத்தரவாதம் அளிக்கிறது.சட்டப் பாதுகாப்பு இந்தத் திட்டத்தால் சேகரிக்கப்படும் அனைத்துத் தரவுகளும், இலங்கை நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு 9ஆம் எண் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டத்திற்கு முழுமையாக உட்பட்டவை.

பயோமெட்ரிக் மற்றும் மக்கள்தொகை தரவுகளின் முழு உரிமை, கட்டுப்பாடு மற்றும் பாதுகாவலர்த்துவம் இலங்கை ஆளும்தரப்பிடம் உள்ளது. தரவுத்தளத்தை அணுக மறுத்தல் எந்தவொரு வெளிநாட்டு ஆளும்தரப்பு, முதலீட்டாளர், தொழில்நுட்ப வழங்குநர் அல்லது திட்டத்தில் ஈடுபட்டுள்ள பிற மூன்றாம் தரப்பினருக்கும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் இலங்கை குடிமக்களின் இந்த தனிப்பட்ட தரவுத்தளத்தை அணுக, பெற அல்லது பயன்படுத்த எந்த சட்ட அல்லது தொழில்நுட்ப நோக்கமும் இல்லை.

தொழில்நுட்ப பாதுகாப்பு தனிப்பட்ட மற்றும் பயோமெட்ரிக் தகவல்கள் உட்பட அனைத்துத் தரவுகளும், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக உயர்ந்த குறியாக்க தரநிலைகள் மற்றும் (CES 256 மற்றும் RSA-2048 ஆகியவற்றால் பாதுகாக்கப்படுகின்றன, பயோமெட்ரிக் சாதனங்களில் வன்பொருள்-நிலை குறியாக்கம் மற்றும் FIPS 140-2 தரநிலைகளுக்கு இணங்கும் எச்எஸ்எம் -அடிப்படையிலான முக்கிய மேலாண்மை (குறியாக்கம்) மூலம், தரவு ஓய்லிலும் பரிமாற்றத்திலும் குறியாக்கம் செய்யப்படுகிறது.

மேலும், இந்தத் தரவு சைபர் பாதுகாப்பு விதிகளின் கீழ் உள்ளூரில் நிறுவப்பட்ட தரவு மையங்களில் மட்டுமே பாதுகாப்பாகச் சேமிக்கப்படுகிறது.எனவே, குடிமக்கள் தரவின் ரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்து எந்த சந்தேகமும் இருக்கக்கூடாது என்று நான் உறுதியளிக்கிறேன்.

பிறப்பிலிருந்து ஒவ்வொரு நபருக்கும் ஒரு தனித்துவமான, மீட்டெடுக்க முடியாத ‘இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாள எண்‘ (SN -UTI எண்) உருவாக்கப்படுகிறது.

டிஜிட்டல் சரிபார்ப்பின் ஊடாக இந்த எண் மற்றும் பயோமெட்ரிக் தரவைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் தனிநபரின் அடையாளத்தை டிஜிட்டல் முறையில் சரிபார்க்கும் திறனை இந்த அமைப்பு வழங்குகிறது. பதினைந்து (15) வயது அல்லது அதற்கு மேற்பட்ட குடிமக்கள் அடையாளப் பதிவுக்காகப் பதிவு செய்யப்படுகிறார்கள், மேலும் பதிவு விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தவுடன் பயோமெட்ரிக் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

மேலும், நகல் சரிபார்ப்புக்காக, தானியங்கி மற்றும் கைமுறைசரிபார்ப்புசெயல்முறைகள்தானியங்கிபயோமெட்ரிக் அடையாள அமைப்பு (APIS) மூலம் பச்சை, அம்பர் மற்றும் சிவப்பு சரிபார்ப்பு முறைகளின்படி மேற்கொள்ளப்படுகின்றன. செயலகங்களில் நிறுவப்பட்ட நபர்கள் மற்றும் அலகுகளைப் பதிவு செய்வதற்கான துறையின் முழு செயல்முறையும் பிரதேச தலைமை அலுவலகத்தில் செயல்படுத்தப்படும்.இதை ஒரு அட்டையை அச்சிடுவதற்கான செலவாகக் கணக்கிட முடியாது.

இது ஒரு தேசிய உள்கட்டமைப்புத் திட்டம். ‘ஒரு அலகிற்கான செலவு‘ என்பதை,மென்பொருள் மேம்பாடு, மையப்படுத்தப்பட்ட தரவு சேமிப்பு அமைப்புகள் (தரவு மையங்கள்) நிறுவுதல், பயோமெட்ரிக் தரவு சேகரிப்பு உபகரணங்கள்,முழு அமைப்பின் சைபர் பாதுகாப்பு மற்றும் வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கான பராமரிப்பு ஆகியவற்றின் கூட்டுத்தொகையாகக் கருத வேண்டும். பதிவு செய்யும் மொத்த குடிமக்களின் எண்ணிக்கையால் வகுக்கவும்.

எனவே, இதை ‘ஒரு அடையாள அட்டைக்கான‘ செலவாகக் கருதாமல் தேசிய அளவிலான டிஜிட்டல் உள்கட்டமைப்பை உருவாக்குவதில் ‘ஒட்டுமொத்த முதலீட்டின்‘ ஒரு பகுதியாகக் கருதுவது மிகவும் துல்லியமானது.

அதன்படி, மொத்த திட்டச் செலவு தோராயமாக 14 பில்லியன் இலங்கை ரூபாய்கள் மற்றும் ஆரம்பத்தில் தகுதியுள்ள முழு மக்களுக்கும் க்கும் டிஜிட்டல் அடையாளம் வழங்கப்பட வேண்டும்,அதாவது 17.5 மில்லியன். அதன்படி, ஒரு டிஜிட்டல் அடையாள அட்டையின் விலை தோராயமாக 800 இலங்கை ரூபாவாகும்.

மேலும், தற்போது தேசிய அடையாள அட்டை இல்லாத ஒருவர் முதல் முறையாகப் பதிவுசெய்யும்போது, பாலிகார்பனேட் அட்டை மற்றும் டிஜிட்டல் அடையாளத்தை வழங்குவதற்கான தொடர்ச்சியான செலவுகளும் சேர்க்கப்பட வேண்டும்.

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து இலங்கைப் பிரசைகளுக்கும் அந்த அடையாள அட்டையைத் தயாரிப்பதற்குச் செலவாகும் மொத்த தொகை இலங்கை ரூபாய் 14 பில்லியன் ஆகும். இதில், இலங்கை ரூபாய் 10 பில்லியனிற்கும் அதிகமான தொகை இந்திய அரசிடமிருந்து உதவியாகப் பெறப்படுகிறது.

டிஜிட்டல்அடையாளஅட்டையைத்தயாரிக்கும்செயன்முறை தொடர்பானஅனைத்துஒப்பந்தங்களையும்சபையில்சமர்ப்பிக்க முடியாது.இருதரப்பு இராஜதந்திர ஒப்பந்தங்களின்படி, இந்த ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை ஒருதலைப்பட்சமாக வெளியிட முடியாது - என்றார்.

# தென்கெரிய தூதுவர் சஜித்துடன் சந்திப்பு

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் லீ மியான் ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையிலிருந்து கொரியாவுக்கு தொழில் நிமித்தம் செல்லும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு கொரியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய, உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் மொழிப் பரீட்சை உட்பட அனைத்துத் தகுதிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சராசரியாக, ஒரு காலாண்டிற்கு சுமார் 1500 முதல் 2000 வேலைவாய்ப்புகள் இதன் மூலம் இலங்கைக்குக் கிடைத்தன.

2023 முதல் ஒரு காலாண்டுக்கு கிடைத்து வந்த வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை இன்று 200க்கும் குறைவாகவே அமைந்து காணப்படுகின்றன. 2023ஆம் ஆண்டு கொரியப் பரீட்சைக்குத் தோற்றிய 5000 பேருக்கும் அதிகமானோர் இன்று அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதைக் காண முடிகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டி, தற்போதுள்ள தொழில்வாய்ப்பு ஒதுக்கீட்டைவிட கூடிய வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும், இலங்கை தற்போது முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்குத் தேவையான ஆதரவைப் பெற்றுத் தருமாறும், இதற்காக, நாட்டிற்கு அதிக அளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும், வெளிநாடுகளில் இருந்து கொண்டு தொழில் புரிந்துவரும், தொழில்முறை திறமையான தொழிலாளர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர், கடந்த காலங்களில் கொரியா ஒரு நாடாக இலங்கைக்குப் பெற்றுத் தந்த ஆதரவுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

# போட்டிப் பரீட்சைகள் ஒத்திவைப்பு

மழைக் காலநிலையால் ஏற்பட்டுள்ள மோசமான பாதிப்புக்களைக் கருத்திற் கொண்டு, இவ்வார இறுதியில் நடைபெறவிருந்த சில போட்டிப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சேவையில் வகுப்பு 1 தரம் 3 இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பமல்லாத (கட்டம் 2) தரம் 3 விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை என்பன பிற்போடப்பட்டுள்ளன. இப்பரீட்சைகள் முறையே டிசம்பர் 13 மற்றும் 14 ஆகிய தினங்களில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழிற்சார் கற்கைகள் நிலையத்தினால் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கலைமாணி (பொது) வெளிவாரிப்பட்டப்படிப்பிற்குரிய 2022/2023 நுழைவுப்போட்டிப்பரீட்சையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் நாடளாவிய ரீதியில் அனைத்து பாலர் பாடசாலைகளுக்கும், முன்பள்ளி பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கும் மூடப்படும் என முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் அறிவித்துள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2025இல் வெளியிடப்பெற்றது